11.08.2025 OS.No.116/2022 PW2 Name :.**லட்சுமணன்**

குறுக்கு விசாரணை

1. சாட்சியம் சொல்ல நீதிமன்றத்திலிருந்து எனக்கு அழைப்பாணை வந்தது. நான் வழக்கறிஞர் மூலமாக தான் நீதிமன்றத்திற்கு வந்தேன். வாதி என்னுடைய தகப்பனார். வழக்கில் என்னை தவிர ஜெயசாம்ராஜ் என்பவரும் சாட்சியாக இருக்கிறார். நானும் அவரும் நண்பர்கள். ஜெயசாம்ராஜ் படத்தில் நடிப்பதற்காக தயாராகி வருகிறார். பிரதிவாதி மீதும் அவர் கணவர் மீதும் வாதி வழக்கு போட்டுள்ளார். அவ்வாறு வாதி வழக்கு போடவில்லை என்றும் நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.
2. நான் தனியார் கம்பெனியில் வேலை செய்கிறேன். நானும் என் தகப்பனாரும் லேவாதேவி தொழில் எதுவும் செய்வதில்லை. என் தகப்பனார் ராஜாமாணிக்கம் கூலி தொழிலாளி என்றால் மேஸ்திரி வேலை செய்கிறார். அவருக்கு அந்த வருமானம் மட்டும் தான் உள்ளது என்றால் சரியல்ல. நாங்களும் வேலைக்கு சென்று சம்பாதிக்கிறோம். சுமார் 8 ஆண்டுகளாக நான் வேலைக்கு செல்கிறேன். வழக்கில் அதை கூறவில்லை.
3. என் தகப்பனார் விஜயா வங்கி கணக்கு வைத்திருப்பது பற்றி எனக்கு தெரியும். விஜயா வங்கி கணக்கு புத்தகத்தை எதையும் வழக்கில் தாக்கல் செய்யவில்லை. வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையே நடந்த பணபரிவர்த்தனை பற்றி எனக்கு நேரிடையாக தெரியும். வழக்கறிஞரிடம் வழக்கு விவரங்களை நானும் என் தகப்பனாரும் சேர்ந்து தான் சொன்னோம். பிரதிவாதியின் பதில் பற்றி வழக்கறிஞர்

மூலம் தெரிந்து கொண்டேன்.

4. வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்ப நானும் என் தகப்பனாரும் சேர்ந்து தான் சென்றோம். பதில் அறிவிப்பில் வாதியை யார் என்று தெரியாது என பிரதிவாதி கூறியுள்ளார். பாண்டு பேப்பரை பிரதிவாதியும் அவர் கணவரும் சேர்ந்து தான் வாங்கி வந்தார்கள். முத்திரை தாள் 26.03.2022ல் வாங்கபட்டது. பிரதிவாதி பெயரில் அது வாங்கபட்டுள்ளது. அந்த ஆவணத்தை நான் பார்த்துள்ளேன். அதில் என் தகப்பனார் கையெழுத்து இல்லை. பிரதிவாதி ஆங்கிலத்தில் கையெழுத்து போட்டுள்ளார்.

5. சாட்சிகளின் கையெழுத்து மட்டும்தான் உள்ளது அவர்களின் முழு முகவரி எதுவும் இல்லை. பத்திரம் தயாரித்தவர் முழு முகவரி இல்லை. வாதியிடம் பிரதிவாதி பணம் வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்றும் அவ்வாறு எந்த பணமும் வாங்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. போலியான ஆவணம் மூலம் வழக்கு போட்டுள்ளோம் என்றல் சரியல்ல. வழக்கு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 11/08/2025 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2025.08.11 15:22:22 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.